"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 2004



குறோய்டன் சக்தி கணபதி ஆலயம்

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# GLOBAL ESTATE AGENTS LTD




**We specialise in Selling / Letting properties, and have proved our services by selling a few properties in Your area within 2-3 weeks**

**We urgently require two to four bed properties around your area for serious buyers registered with us.**

## Our charges are only 0.6% + VAT on No Sale No Fee Basis

## Why not call us NOW for IMMEDIATE RESULTS and a FREE VALUATION

Call us on

## 020 8682 5100

**233 Mitcham Road, Tooting SW17 9JG**

# GL Financial Services Ltd

*Total, Trusted, Mortgage Solutions...*

**Are you having problems in getting a Mortgage?**

* Can't get the right Mortgage? * No Bank statements?
* No Proof of Income * Difficult credit history?
**(CCJ's, Defaults, Mortgage Arrears,...)**
* Selfemployed no accounts * Need to raise funds for business?
* Trying to bring all your financial commitments under one payment?

**Whatever the problem, One call to**
**GL Financial Services**
**will heal your financial headache**

**We specialise in arranging**

* Mortgage for 1st Time Buyers * Buy - to - Let Mortgages * Let - to - Buy Mortgages
* Remortagages * Right to buy Mortgages * Commercial Mortgages * Commercial Loans

## Life Assurance, Building & Contents Insurance

247 Mitcham Road, Tooting, SW17 9JQ

## tel : 020 8672 2333

*Your home is at risk if you do not keep up repayments on mortgages or other loans secured on it*

மணி 12

# கலசம் KALASAM

ஒலி 45

www.smsuk.org.uk
E-mail: kalasam@hotmail.com, kalasamsms@yahoo.co.uk

# காலத்தின் கட்டாயம் கலசம்

பதினொரு ஆண்டுகளைப் பூர்த்திசெய்த மன நிறைவோடு பன்னிரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது கலசம். இதுவரை தொடர்ந்து காலாண்டுக்கொரு முறை எந்த தடங்கலுமின்றி 44 இதழ்கள் வெளி வந்துவிட்டன. இது ஒரு கூட்டு முயற்சியானதால் இக் காலாண்டிதழ்களைச் சிறப்பான முறையில் வெளிக்கொணர முடிகின்றது என்று கூறுவதில் நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம்.

பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் கலசத்தை வெளியிட ஆரம்பித்த காலத்துக்கும் இன்றைய நாட்களுக்குமிடையில் மிகவும் பாரிய மாற்றங்களைக் கண்டு கொண்டு வருகின்றோம். எதுவும் காலத்தின் தேவையை ஒட்டியதாக அமையவேண்டும். எனவே கலசம் கடந்த தன் இதழ்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள்.

எமது மாணவமணிகளையும், இளையோரையும் நாம் மறந்து விடவில்லை. எங்களின் அடுத்த பரம்பரையினர் இவர்கள் தானே? இவர்களைக் கலசத்தில் எழுதவைப்பதற்குப் பல முயற்சிகள் செய்து வருகின்றோம். பல பரிசளிப்புத் திட்டங்களை முன்வைத்து ஊக்குவித்து வருகின்றோம். அவர்களை வார இறுதியில் அவர்கள் தமிழ் மொழி பயிலும் பாடசாலைக்கு சென்று நேரில் அவர்களைச் சந்தித்து அவர்களது தமிழ்மொழி ஆசிரியர்களின் உதவியோடு கலசத்தில் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எழுத வைப்பதற்கு முயன்று வருகின்றோம். புலம்பெயர் நாடுகளில் தொடர்ந்து சைவக் கோயில்கள் மற்றும் சைவ சமய ஸ்தாபனங்கள் இருக்க வேண்டுமானால் எமது அடுத்த தலைமுறையினரை இவ்ஸ்தாபனங்களின் நிர்வாகக் குழுக்களில் சேர்த்துக்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாக யாம் கருதுகின்றோம். இவ் இளைய சமுதாயத்தினருடைய பங்களிப்பும் சேவையும் தற்போது உள்ள சில கோயில்களில், சமய ஸ்தாபனங்களில் இருந்தாலும் பெரும்மான்மையானவற்றில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் காணப்படவில்லை.

எங்கள் மாணவச் செல்வங்களின் திறமைகளை இப்போது நம்மவரும், நாம் குடியேறிய நாட்டினரும் வியக்கத்தொடங்கியுள்ளார்கள். பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையிலும் அதன் பின்னர் தாம் தொழில் புரியும் ஸ்தாபனங்களிலும் எமது கண்மணிகள் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளார்கள். நல்ல நிர்வாகத் திறமும் நிதி வளமும் உள்ள எம் இளம் சந்ததியினரை இனியாவது இந் நாட்டில் உள்ள சைவ கோயில்கள் சமயஸ்தாபனங்கள் தங்கள் நிர்வாகசபை குழுக்களில் அவர்களை நியமித்து அவர்களுடைய கருத்துக்களையும், காரணங்களையும் கேட்பது காலத்தின் கட்டாய தேவையாக நாம் கருதுகின்றோம்.

கலசம் தனது பன்னிரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் வேளையில், புதிய வாசகர்கள் பலர் நேசக்கரம் நீட்டி இணைவதும், இளம் சந்ததியினரை நாம் தேடி தேடி இணைப்பதும், வர்த்தகப் பெருமக்களின் கரங்கள் சளைக்காது எமக்குக் கைகொடுப்பதும் எமக்கு உற்சாகமூட்டுகின்றது.

**கலசம்** காலம் எனும் நெடுஞ்சாலையில் தனது நீண்ட பயணத்தைத் தொடர்கிறது. பயணம் ஆறுதலாக இருந்தாலும் இது ஒரு ஓட்டகப்பயணம். கலசம் தன் சுவடுகளை ஆழமாகவும் நேர்த்தியாகவும் பதிந்து கொண்டு வருகின்றது. இதைக் காலத்தின் கட்டாயமாகக் கலசம் கருதுகின்றது.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ.தர்மலிங்கம், திரு.ச.யோகநாதன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# குறோய்டன் சக்தி கணபதி ஆலயம்

21 Brigstock Road, Thornton Heath,
Croydon, Surrey CR7 7JJ • Tel: 020 8689 3466

இன்றைய கணினி யுகத்தில் புதுப்புது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு மத்தியிலும் ஒவ்வொரு மனிதரும் எதோ ஒரு விதத்தில் நிம்மதியின்றித் தவிக்கின்றனர். அதற்கு மருந்து தேடி முடியாமல் கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக இந்தியா சென்று யோகம், தியானம், இந்துசமய தத்துவங்கள் என்பவற்றின் மூலம் ஏதோ ஒரு வகையில் நிம்மதியடைகின்றனர்.

இறையுணர்வு என்பது ஈழத்தமிழ் மக்களின் இரத்தத்தில் கலந்துவிட்ட விடயம். சூழ்நிலை காரணமாக அமைத்து சிவாச்சாரியர்களைக் கொண்டு பூஜைகள் வழிபாடுகள் எல்லாம் நடத்திவருகின்றனர்.

இலண்டன் மாநகரிலும் அயலிலுள்ள எம்மக்கள் செறிந்து வாழும் இடங்களிலெல்லாம் கோவில்கள் அமைத்திருக்கின்றார்கள். இவைகள் கோவில்களாக மட்டுமல்லாமல் எங்கள் கலாசார விழுமியங்களை அழியவிடாமல் இந்த நாட்டில் பிறந்து வளரும் இளைய சந்ததியினருக்கு அவற்றைக் கற்பிக்கும் பணியையும் செய்து வருகின்றன.

குறொய்டன் தோண்டன் கீத் பகுதியில் அமைந்துள்ள சக்திகணபதி ஆலயமும் கடந்த இரு ஆண்டுகளாக இப்பகுதியிலுள்ள எம் மக்களுக்குத் தன்னாலான ஆன்மிகப் பணி–களைச் செய்து வருகின்றது. வழிபாடுகளுடன், மட்டும் நின்றுவிடாமல் சமயவகுப்புக்கள், பரதநாட்டியம், மிருதங்கம், யோகம், தியானம் போன்றவையும் ஆலயத்தில இடம்பெற்று வருகின்றன. அத்துடன் தாயகத்தில் போரின் கொடுமையினால் அனாதைகளான சில பிள்ளைகளுக்கும் ஆலயம் உதவும் கரங்கள் அமைப்பின் மூலம் பல நன்மையான உதவிகளைச் செய்துவருகின்றது.

இவ்வாலயத்தில் ஒவ்வொருநாளும் காலை 9.30 மணி, மதியம் 12.00 மணி, மாலை 8.00 மணிக்கும் குளிர் காலத்தில் இரவு நேரப்பூசை 7.30 மணிக்கும் நடைபெறுகின்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை, மாலை அபிஷேகங்களும் பூர்வ பக்ஷ, அபரபக்ஷ சதுர்த்தி விழாக்களும் நடைபெறுகின்றது. மற்றும் சமயகிரியைகளான அன்னபிராசனம் , ஏடுதொடக்குதல், திருமணம் போன்ற சேவைகளும் ஆலயத்தால் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருடமும் ஆவணிச் சதுர்த்தியைத் தோத் தினமாகக் கொண்டு 10 தினங்களுக்கு அலங்கார உத்ஸவம், லக்ஷார்ச்சனை என்பன நடைபெறுகின்றன. ஆலயத்தின் மணவாளக்கோல தினமான புனர்பூச நக்ஷத்திரத்தினை பூர்த்தி தினமாகக்கொண்டு 10 நாட்களுக்கு விசேட அபிஷேகங்களும் பூஜைகளும் மேற்கொள்ள இவ்வருடம் முதல் திருவருள் கைக்கூட்டியுள்ளது.மக்கள் சேவையே மகேசன் சேவையென ஆலய வளர்ச்சியைத் தன் உயிர் மூச்சாகக்கொண்டு இயங்கிவரும் பிரம்ஸ்ரீ இராமநாத வாகீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்களின் சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்............

# தண்ணீரில் மூழ்கிய தமிழ் இராச்சியங்கள்!!

**அண்மைக்கால (கார்த்திகை 2001) புதைபொருள் அகழ்வாராய்ச்சி ஆதாரங்கள் வெளிப்படுத்திய சிந்தனையைத் தூண்டும் கண்டுபிடிப்புக்கள்.**

* உலகத்திலேயே மிகப் பழைமைமிக்க நாகரிகம் இந்தியாவில்தான் உருவாகியது!
* தமிழர் பாரம்பரியம், மொழி, கலாசாரம், பதினாறாயிரம்(16000) ஆண்டுகள் தொன்மையானவை.!
* யோகக்கலை இன்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளாகத் தொடர்கிறது!
* (15000) பதினையாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய வெள்ளத்தால் (பிரளயத்தால்) கடலில் மூழ்கிய பண்டைக்கால கட்டிடங்கள், பொருட்களின் கண்டுபிடிப்பு!
* இந்த புதிய கண்டுபிடிப்பால் உலக சரித்திரமே மாற்றி எழுதப்படவேண்டிய நிலையில் உள்ளது!

உங்கள் சிந்தனைக்கு ஒரு சிறு பொறி............
மேலே படியுங்கள்!!

– வைத்திய கலாநிதி வானதி இரத்தினராஜா


கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ் என்று பல அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.


தமிழர்களின் புராணக் கணிப்புப்படி தமிழ் மொழி கிட்டத்தட்டப் பன்னீராயிரம் ஆண்டுகள் பழமையானது என்று எனது தமிழ் ஆசிரியர் ஒருவர் கூறுவார். அன்று அவர் கூறியதைச் சமீபகால (2001) அகழ்வாராய்ச்சி ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தி! நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களுக்கு நாம் மிகுந்த நன்றி சொல்ல வேண்டும்.
(சமீபகாலம் வரை தமிழ்ப் புராண கால கணிப்புக்களை ***உலகம்*** புறக்கணித்தது தெரிந்ததே)

மகாபலிபுர சிற்பங்கள் கடலின் வெள்ளத்தில் கொள்ளைபோன பெரிய நகரத்தின் மிகுதியே என்றும் அதன் எச்சங்கள் இன்றும் ஆழ்கடலில் இருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்திரன் அந்த நகரத்தில் பொறாமைகொண்டு அந்த நகரத்தை வெள்ளம் கொண்டு அழிவை ஏற்படுத்தியதாக ஒரு பழைய கதை கூறுகிறது.

பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முன்பு ஒரு பிரளயம் (கடல் வெள்ளப்பெருக்கு) வந்ததாகவும் மனு என்று அழைக்கப்பட்ட ஒரு யோகி (ரிஷி–முனிவர்) இருந்தார் என்றும் அவர் யோகக்கலையில் வல்லவர் என்றும், அவர் மனித இனத்தை வெள்ள அழிவிலிருந்து காப்பாற்று முகமாக ஒரு கப்பலில் எல்லாரையும் ஏற்றி, அத்துடன் தானியங்கள், மரவிதைகள், விலங்குகள் என்பவற்றையும் ஏற்றித் தண்ணீரில் மிதக்கவிட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்தக் கப்பல் ஒரு மலையுச்சியில் இமயமலைச் சாரலில் கரைதட்டியதாகவும், அவர்கள் தண்ணீர் வற்றும்வரை இமய மலைச்சாரலில் தற்காலிகமாகத் தங்கி இருந்து வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. இது போலவே வெள்ளத்திலிருந்து தப்பியவர்களால் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கட்டப்பட்டது என்பது ஐதீகம்.

அன்று இமயமலைச் சாரலில் ஆதிக் குடியிருப்புக்கள் தற்காலிகமாக இருந்தது, இன்று ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய விஞ்ஞானக் கணிப்புக்களின்படி இற்றைக்கு (15000) பதினையாயிரம் ஆண்டுகளுக்குமுன் பிரளய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்போது 400 நானூறு அடி உயரத்துக்குத் தண்ணீரின் நிலை(அளவு) உயர்ந்ததாகவும் உறுதியாகி உள்ளது. இந்தக் காலகட்டத்தில் நிலப்பரப்புக்கள் கூடுதலாக இருந்ததும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பனிக்கட்டிகள் உருகியதால் வந்த வெள்ளத்தால் கடலின் அளவு உயர்ந்தும் பல நிலப்பரப்புக்கள் தண்ணீரில் ஆழ்ந்தும் போனதையும் உறுதிப்படுத்தி உள்ளனர். இதையே எமது பழைய புராணங்களும் குறிப்பாக ரிக் வேதமும் கூறுகின்றன.





இந்த வெள்ளப்பெருக்குக்கு முன், அதாவது (15000) பதினையாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையும் (ஈழம்) இந்தியாவும் ஒன்றாகப் பெரும் நிலப்பரப்பால் இணைத்திருந்தன. இதை டரம் **(Durham)** பல்கலைக்கழகம் டாக்டர் கிளென் மில்ன் **(Dr.Glenn Milne)** இந்தப் படம் மூலம் விளக்கி இருக்கின்றார். இவர் ஒரு புவியியல் ஆய்வாளராவர் **(Geologist).**

நான் முன்பு குறிப்பிட்ட மதுரை மீனாட்சி கோவில் மிகமிகப் பழைமை வாய்ந்த கோவிலாகும். இந்தக் கோவில் கட்டப்பட்ட கால கட்டத்தில் முதற் தமிழ்ச்சங்கம் இருந்ததாகவும் அது வெள்ளத்தால் பதினோராயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு (11600) முன் அழிக்கப்பட்டதாகவும் புராண வரலாறு கூறுவதை அமெரிக்கக்கல்லூரி (இந்தியா) தமிழ் துறை இயக்குனர் டாக்டர் T.N.T. கரன் **(Haran)** விளக்கினார்.

முதற்சங்க காலத்தில்(படம்-1) இந்தியாவும் இலங்கையும் நிலப்பரப்பால் இணைந்திருந்தால் இலங்கையில் தமிழர்கள் அப்போதிருந்து வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் இராவணேசன் காலத்தில் இராமர் கடலைக்கடக்கப் பாலம் கட்டி இலங்கைக்குச் சென்ற கதை நாங்கள் அறிந்ததே. எனவே இந்த காலகட்ட கதை (6000) ஆறாயிரம் ஆண்டு காலத்தின் கதையைக் கூறலாம். (இந்த சந்தர்ப்பத்தில் ஓர் ஆதாரத்தை நாம் புரிந்துகொள்ளலாம் -தமிழர் இலங்கையில் பூர்வீகமாக அப்போதே இருந்திருக்கிறார்கள் என்பதே அது) இன்றைய விஞ்ஞான வளர்ச்சி, இந்தப் பாரம்பரிய புராணக்

(19ம் பக்கத் தொடர்ச்சி...)

# சிதம்பரம்

டாக்டர் கதிர்காமநாதன்

சிதம்பரத்தைத் தரிசிக்க முத்தி
(பயணக்கட்டுரை)

கோவில் என்றால் அது சிதம்பரத்தையே குறிக்கும். இக்கோவிலின் பழைமையும், பெருமையும், பெயரும் அளப்பரியது. இதனாற்றான் கோவிலின் பெயரே ஊரின் பெயராகிவிட்டது. இக்கோவில் சோழர்களால் கட்டப்பட்டு 40 ஏக்கர் பரப்பில் நான்கு கோபுரங்ளைக் கொண்டது. சிதம்பரம் = சித்+ அம்பரம் (சித்– ஞானம்/ அறிவு ;அம்பரம் – வெளி / ஆகாயம்) பஞ்ச பூதங்களில் இது ஆகாயத் தலமாகும். சிவபெருமான் நடராசர் உருவத்தில் தெற்கு வாசல் நோக்கி இருப்பார். கோவில் வாசலில் முக்குறுணிப பிள்ளையார் பெரிதாக, பொலிவாக எட்டடி உயரத்தில் அமர்ந்து வரவேற்பார். வியந்து உடனே தோப்புக்கரணம் போடச்செய்வார். தமிழ்நாட்டில் இவர்தான் பெரிய பிள்ளையார் ஆவார். கோவிலினுள் 1– சிற்றம்பலம் 2–பொன்னம்பலம் 3– பேரம்பலம் 4– நிருத்தசபை 5– இராசசபை என ஐந்து மண்டபங்கள் இருக்கின்றன.



சிற்றம்பலத்தில் தான் நடராசப்பெருமான் திருநடனம் புரிகின்றார். பக்க வாசல் வழியாக இவ் உயர்ந்த இடத்திற்கு செல்லவேண்டும் . பக்கவாயிலினூடாகச் சென்றபின்னர் உள்ளே செல்வதற்கு வெள்ளியிலான ஐந்து படிகள் பஞ்சாக்கரப் படிகள் (நமசிவாய) காணலாம். இரு புறமும் யானை உருவங்களை முதலில் பார்க்கலாம். பெருமானின் வலது பக்கம் சிதம்பர ரகஸ்யம் உள்ளது. வழிபாட்டின்போது இவ்விடத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட வில்வ இலைகளைக் காணலாம். இது இறைவன் ஞான வெளியில் இருக்கின்றான் என்பதைக் குறிக்கின்றது. பொன்னம்பலம் (கனகசபை) அபிடேகம் செய்யுமிடம். இங்கு ஸ்படிகலிங்கத்திற்கு ஆறுகாலப் பூசை நடைபெறும். ஒரு காலப் பூசையில் கலந்துகொண்டோம். ஸ்படிகலிங்கத்தை ஒரு பெட்டியில் கொண்டு வந்து, கவனமாக எடுத்து அபிடேகம் செய்தனர். நீர், பால், தேன், சந்தனம், விபூதி போன்றவைகளால் அபிடேகம் செய்து ஒரு நிலையில் சோற்றாலேயே மூழ்கச்செய்வர். பார்க்கப் பரவசமாக இருக்கும். இதே போல் இவற்றை அகற்றும் முறையும் சிறப்பாக இருக்கும். இவற்றைப் பிரசாதமாக வழங்குவார்கள். பேரம்பலத்தில் பஞ்சமூர்த்திகளையும்,கொடி மரத்திற்குத் தென் பகுதியிலுள்ள நிருத்தசபை ஊர்த்துவத் தாண்டவமாடிய இடத்தையும் கண்டு இராசசபையில் ஆயிரங்கால் மண்டபத்தையும் பார்க்கலாம்.

அன்று தைப்பொங்கல் தினம். அதிகாலையில் எழுந்து எம் பெருமான் பள்ளியெழுச்சியைக் காணச்சென்றோம். துயில் விட்டுநீக்கி, கற்பூர ஆராதனை காட்டி, சங்கு, சேமக்கலம், மேளம், பஜனை கோஷத்துடன் பல்லக்கில் எம்பிரான் செல்லும்காட்சி மயிர்க்கூச்செறியச்செய்யும். இங்கிருக்கும் மேளம்–ஒருவிதமானது. இக் கோவிலில் மட்டுமே இதைக்காணலாம்.

பொன்னம்பலத்திற்கு முன்னதாக கிழக்கு நோக்கிய கோவிந்தராஜப் பெருமாள் அர்ச்சாவதாரநிலையில் தெற்கில் தலைவைத்தும் வடக்கில் கால் நீட்டியும் பள்ளிகொண்டிருக்

கின்றார். இதைச் சித்திரகூடம் என அழைப்பார்கள். சிவனும் விஷ்ணுவும் வேறல்ல என்ற தத்துவம் சிதம்பரத்திலே புலனாகின்றது. சிவகாமசுந்தரி (சிவன் + காமம் + சுந்தரி) சிவனை விரும்பும் சுந்தரி–சிவகாமியினது கோவில் தனியே இருக்கிறது. செல்லும் வழியில் சிவகங்கைத் தீர்த்தத்தையும் காணலாம். இதற்குச் சமீபமாக ஓரிடத்தில் இருந்து பார்த்தால் நான்கு கோபுரங்களையும் தரிசிக்கலாம். நாலு கோடி புண்ணியம். சிதம்பரத்தில் பல தெய்வங்களையும் மண்டபங்களையும், வீதிகளையும் காணலாம். ஆனால் நர்த்தனமாடும் விநாயகர் இக்கோவிலுக்கே உரியவர்.

பள்ளியெழுச்சிப் பூசையைப் போல் அர்த்தசாமப்பூசை – (சயனபூசையும்) பார்ப்பது அவசியம். முதலில் வயிரவருக்கு வடை மாலை பூசைசெய்து பின்னர் சுவாமியைப் பல்லக்கில் எடுத்து திருமூலட்டானம் எனும் தனிக்கோயிலுக்கு எடுத்துச்செல்வர். அர்த்தசாமப்பூசை முடிந்தவுடன் எல்லாக் கோவில்களிலுமுள்ள சிவகலைகள் யாவும் இந்த மூர்த்தி விளக்கத்தில் தான் ஒடுங்குவதாக ஐதிகம். பின்னர் பள்ளியறைக்குக் கொண்டு சென்று படுக்கவைப்பார்கள். பால் பிரசாதம், வாழைப்பழம் பிரசாதமாகப் பெற்று அந்தணர்களையும் வணங்கி மக்கள் வீடு செல்வர்.

நடராசர் ஓம் எனும் பிரணவ வடிவினராய் ஐவகைத் தொழில்களை உணர்த்தி ஆடுகிறார். பஞ்சசபையில் இது கனகசபை.– ஆனந்த தாண்டவம் இருதயஸ்தானம். இடது காலைத் தூக்கி ஆடும் ஆனந்த நடனம். இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே என திருநாவுக்கரசர் பாடினார். நால்வராலும் பாடல் பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்ட கோவில். சேந்தனார் அருள் பெற்றதும், மாணிக்கவாசகர் திருவாசகம் பாடி முத்திபெற்றதும், சேக்கிழார் பெரியபுராணம் பாடி அரங்கேற்றியதும், திருநாளைப்போவார், திருநீலகண்டர், மெய்ப்பொருள் நாயனார், கணம்புல்லநாயனார், வியாக்கிரபாதர், பதஞ்சலி போன்ற பல அடியார்கள் முத்தி பெற்றதும் இத்தலமே. ஆனிமாத உத்திரத் திருவிழாவும், மார்கழித் திருவாதிரையும் சிதம்பரத்தில் நடைபெறும் பிரசித்தி பெற்ற உற்சவங்கள்.

யாழ்ப்பணத்து ஆறுமுகநாவலர் நாவலர் நல்லூரில் பிறந்து, யாழ் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று, இங்கிருந்து அச்சு இயந்திரத்தைப் பாவித்து சிதம்பரத்தையும், சைவத்தையும் வளர்த்தார். கோவிலின் மேற்கு வாசலுக்குச் சமீபத்தில் நாவலர் ஆரம்ப பாடசாலை எனும் பள்ளிக்கூடம் இருக்கிறது. இது நாவலர் தொடங்கியதாகும். பழைமைய–ாய் இருந்தாலும் ஒரு மாடிகொண்டு தற்போதும் கல்வி கற்க இயங்கிவருகின்றது. பார்க்கும் போது நம்மையறிமாமலே பெருமைப்பட்டு நாவலரை நினைவு கூருவோம். சிதம்பரத்தில் இது நாம் காணவேண்டிய இடமாகும். மேலும் கோவிலிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள தில்லைக் காளியையும் தரிசித்து, நந்தனார் கோவிலையும் தரிசிக்கலாம். நந்தனார் கோவிலில் ஆச்சிரமம், சமாதி உள்ளது. மேலும் இங்கு திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

பிரபஞ்சத்திற்கு அடையாளமான திருவாசியின் வட்டத்தினிலே நடனம் புரியும் நடராஜரின் மேல் கூரை தங்க ஓடுகளால் வேய்ந்திருக்கிறார்கள். இதைவிட கொடிமரமும் தங்கத்தால் ஆனது. பொன்போன்ற பொன்னம்பலத்தானை யாவரும் தரிசித்து முத்தி பெறுவோமாக.

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ?

# Tamil Siddhars and Alchemy

by Joseph Caezza

***[Joseph Caezza has been a student of Yogi Ramaiah since 1986. He is a member of the Philosophers of Nature and Arizona Babaji Yoga Sangam, USA.]***

(contd from last issue)

**Karuvoorar**, an architect as well as a yogin-alchemist, played a major role in the design and construction of the **Brihadeshwara Temple** at Thanjavur. The feats involved in this task recall not only the emergence of the Gothic cathedrals, which occurred at about the same time but also the construction of the pyramids. A popular tour guide describes this as one of India's greatest temples -

"This superb and fascinating monument is one of only a handful in India with **World Heritage listing** and is worth a couple of visits. On top of the apex of the 63 meter high temple, a dome encloses an enormous Shiva Lingam."

From a western perspective **Bogar** might be the most intriguing of the siddhars. Born into a family of gold smiths in central South-India, Bogar received initiation from the illustrious **Natha Yogi, Kalangi.** Contemplative insight allegedly guided Bogar to construct a primitive form of aircraft that he used in a journey to China. He is also credited with inventing a sea-going craft using a stream engine, preparing an indestructible statue of the god, Muruga, using nine poisonous herbs and minerals and making a major contribution to the siddhar medicine system which boasts possession of fabulous remedies that heal presently incurable diseases and make possible an extreme longevity.

Bogar achieved the ultimate state of perfection at the hill top shrine of **Palani** where the statue he fabricated is still in use. Elaborate temple murals here chronicle his wondrous exploits.


A popular legend describes how Bogar made several missionary excursions into **China**. A master of astral projection and soul transmigration, Bogar entered the body of a recently deceased Chinese youth, revived it and grew to become the Chinese sage, **LaoTzu**, author of the TAO TE CHING and founder of **Taoism**. Taoism has a rich alchemical faction devoted to physical longevity that lends credit to this bizarre tale. The TAO TE CHING embodies the same esoteric style that haunts the obscure language of the Tamil siddhars and echoes ideas from western alchemy. Any student of Taoist Yoga is shocked by the similarity of its techniques to those of the Tamil siddhars.

Initially I could not accept the possibility that Bogar was Lao Tzu. During an extensive pilgrimage to the shrines of the siddhars in 1989 I encountered well educated residents of Palani who took it for granted that Bogar was indeed Tao Tzu. Finally, I found a pilgrimage guide book written in English, a rare commodity indeed in this off-the-beaten-track location. It described Palani's Hill temple to Lord Muruga and contained a brief monograph on Bogar identifying him as the Chinese sage, Lao Tzu.

Bogar's monumental work of **7000 verses** has recently been edited in Tamil by one of the great living apostles of this tradition, **Yogi S.A. Ramaiah** of Madras. Since 1954, Yogi Ramaiah has traveled the world, giving lectures, initiating students and building temples. **An American center at Yuma, Arizona features a temple containing eighteen granite images dedicated to the greatest siddhars.** He does not offer the customary guru-disciple relationship but rather

teaches postures, breathing and contemplative techniques geared to give access to what Anthony Rooley described so wonderfully in the third issue of ALEXANDRIA as "The Invisible College", a higher inspired state of mind. Jean Dubuis, the contemporary French alchemist describes a vaguely similar practice as "night school".These concepts might be related to the medieval notion of "the communion of saints" not as blind faith but as actual guiding contemplative experience.

Although mantras do play a role the actual advanced techniques taught By Yogi Ramaiah seem more in tune with the methods of western alchemy. Yogi Ramaiah has so far avoided becoming a personality cult by Shifting attention to his own guru, **"Babaji"**, the immortal Yogin made famous in **Yogananda's AUTOBIOGRAPHY OF A YOGI** . This shad-




owy character remains a premier figure among that semi-mythical category of perfected immortal saints which include personages like **Harikhan Baba** and **Bagwan Lakulisa**. These beings allegedly inhabit remote regions of the Himalayas, emerging on rare occasion to reveal the more esoteric levels of yogic attainment. In recent times "Babaji" has become a New Age band wagon that everyone delights to jump on, from Sondra Ray and Leonard Orr, the father of the rebirthing movement to Nina Hagen, the German Rock singer. Babaji's picture even appears on the album jacket of the **Beatles, SERGENT PEPPERS LONELY HEARTS CLUB BAND.**

In the vast realm of human imagination, what myth could possibly be more attractive to theego than that of physical immortality? Yogi Ramaiah offers the world a unique biography of this immortal saint. Babaji was born in **203 A.D. near** the sanctuary of **Chidambaram**. At an early age he was kidnapped, sold into slavery and then purchased by a wealthy man who freed him. Babaji was thus absolved from the responsibilities of caste and family. He soon fell in with a group of advanced wandering sages who trained him in contemplative methods of self-realization. In his wanderings Babaji studied with Bogar at **Katirgama in Sri Lanka** and at Courtrallam with Agastyar. He finally achieved the highest yogic realization at **Badrinath** near the Himalayan boarder. Is there an echo here of the story of Christian Rosenkreutz who sets off as an orphaned youth on a pilgrimage to the Holy Land and falls into the company of mysterious adepts who train him in ultimate wisdom?! A most intriguing enigma might arise from consideration of Babaji's **yantra**, a geometric device used along with mantra for invoking the master's grace and guidance. This yantra consists of a triangle situated in a square in turn circumscribed by a circle. It calls to mind a number of 17th century western alchemical diagrams.

The history of the Tamil siddhars has yet to be written. Their writings remain scattered waiting for the scholarly treatment they deserve. The task of separating the complex mythic and actual historic biographies of these sages recalls the difficulty associated with penetrating the

(see page 18)

உ

சிவமயம்

# ஜெகதீஸ்வரம்
# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
# இலண்டன்



அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே

**இலண்டனில் முதல்முதலாக சிலாரூபத்தில் மூலவர் அமைந்த சிவன் கோயில்**

## திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை *8.00* மணி முதல் மதியம் *1.30* மணி வரை

மாலை 5.00 மணி முதல் இரவு *9.30* மணி வரை


மாதந்தோறும் பிரதோஷ விரதங்களில் சிவபெருமானுக்கு

விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

வாரந்தோறும் திங்கள், செவ்வாய், வெள்ளக்கிழமைகளில் விசேட அபிஷேக ஆரதனைகள் நடைபெறும்.

**100-106 Haydons Road, Wimbledon London SW19 1AW**

**Tell:020 8543 7239 Fax: 020 8540 6245**


KRS
Oriental Store
33 Lee High Street
Lewisham
London SE13 5NS
தரமான இலங்கை, இந்திய
உணவுப்பொருட்கள் உடன்
மரக்கறி வகைகள்
ஓடியோ, சீடி, வீடியோ
அனைத்தையும் நியாயமான
விலையில் ஓரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
Telephone
020 8297 9432

# M. K. SRI & Co

## Solicitors & Administrators of Oaths

**2C, Fairholme Road (Off Station Road)**
**Harrow, Middlesex, HA1 2TN**

**Tel: 020 8515 7000 (4 lines)**
**Fax: 020 8515 7030**
**Fax: 020 8515 7031 (For Conveyancing only)**
**DX: 4232 Harrow (1)**

### We specialise in

- Immigration
- Crime
- Conveyancing
- Matrimonial
- Traffic Offences
- State Benefits
- Wills & Probate
- Employment
- Advice & Assistance at Police Station

### Legal aid work undertaken

### We Are Franchised by the Legal Services Commission in Immigration

**PARTNERS:**
M. K. SRITHARAN
S. SIVASANTHIRAN

**ASSISTANT SOLICITOR:**
SELVI RAVINDRAN


**TRAINEE SOLICITORS:**
AVTAR MANKU
V.KARUNASAAGARAR
T.JOGANATHAN

### Our New Service:

### Work Permit Scheme Advantages

* To enter work and live in the UK through the Work Permit Scheme
* Applies to all whether in the UK or in any part of the world
* Switching allowed from Visitor, Student and Dependant Visas
* Change of Employment afterword is possible
* Permanent Residency in the UK is possible after 4 years of work permit employment

**CONSULTANTS:**
INDRA SEBASTIAN LLM &
MANNAN THANGARAJAH LLM


Talk
News
Shows
Astrology
உலகுக்கு ஓர் சூரியன்,
உலகத்தமிழருக்கும் ஓர் சூரியன்
Music
Medical
Based
Movies
Film
Based
Game Show
Serials
Breakfast
Show
+ 44(0) 208 33 56780
www.suntvuk.com
TV

# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

ஜோதிட பூஷணம் துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்

அன்பார்ந்த கலசம் வாசகர்களுக்கு வணக்கம்! எமது வாழ்வியலின் கலாசார விழுமியங்கள் அனைத்தும் எம் பொக்கிஷங்கள். சமயம், மொழி, பாரம்பரியம் என்பன எம்மை நெறிப்படுத்துகின்ற ஆவணங்கள். ஒருவனுடைய குடும்பத்தில் ஒரு வரையறை வகுக்கப்பட்ட ஒழுக்கம் ஒன்று இருக்கும். அந்த ஒழுக்கம் அந்தக் குடும்பத்தின் வெளியார் பார்வைக்கு கௌரவம் எனப்படுகின்றது. அந்தக் கௌரவத்தைப் பேணுவதற்கும், காப்பாற்றுவதற்கும் அந்தக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இந்த நிலையே சமய கலாசார விழுமியங்களைப் பேணுகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. அதுவே அவனது குடிப்பெருமையை மேம்படச் செய்கின்றது. இதையே வள்ளுவப் பெருந்தகை மிக அழகாகக் கூறுகின்றார்:-

**கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்**

அந்த வகையில் எம் முன்னோர்கள் எமக்கு வாழ்ந்து காட்டிச் சென்ற வழி முறையும் அவர்கள் விட்டுச் சென்ற கலாசார விழுமியங்களும் எம்மை நெறிப்படுத்துகின்ற பொக்கிஷங்களாகும். புராணங்களும் இதிகாசங்களும் எமக்குச் சொல்லி வைத்திருக்கின்ற கதைகளை வெறும் கேலிக்கூத்தாக நாம் நினைத்துவிடக்கூடாது. அவை ஒழுக்க நெறியில் நாம் வாழ்வதற்கு அர்த்தம் புகட்டி நிற்கும் ஏணிப்படிகள். இவற்றை முறையாகப் பேணி அதன் வழியில் வாழ நாம் திடசங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

எமது பாரம்பரியங்கள் இன்றும் அழகாய் அற்புதமாய் நாம் பிறந்த மண்ணில் பேணப்பட்டே வருகின்றது. ஏனெனில் அதன் உள்ளார்ந்த அர்த்தபுஷ்டிகள் நன்கு புரிந்த வாழ்வும் வளமும் கொண்டது நமது ஈழ மண். எந்தப் புதுமைகைளயும் தக்க காரணமின்றித் தமது சமய மொழி, கலாசாரங்களில் செயற்படுத்த விரும்பாத தன்மைகொண்ட எம்மவர்கள் வாழும் அற்புத மண். ஆனால் இன்று, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவர்களில் ஒரு சிலர் இந்திய அரசியல்வாதிகளில் ஒரு சிலரைப் போல் ஆன்மிகத்தையும், கலாசாரத்தையும் கேலிக்கூத்தாக நினைத்து அறியாமை வயப்பட்டுப் புதுமைகளைப் புகுத்த முற்படுவது மிகவும் வேதனைதரக்கூடிய விடயம். அவர்கள் முழுமையாக எமது கலாசார பொக்கிஷங்களை அறியாதவர்கள் என்றே குறிப்பிடவேண்டும். அவர்களுடைய அறியாமைக்கும் இந்தக்கட்டுரை இடையிடையே விளக்கங்கள் கொடுப்பதாக அமையும்.

இந்த வாழ்வு எமக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். அந்த வாழ்வின் தன்மைகளை நன்கு புரிந்து கொண்டு நாம் வாழவேண்டும். ஆசையில்லாத மனிதனே உலகில் இல்லை. எனவே அந்த ஆசையின் பொருட்டு, மனிதன் தன் மானம், உயர்கௌரவம் என்பனவற்றை இழந்து நிற்கவேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டுவிடுகின்றது. இதற்குக் காரணம் லௌகீக போகங்களிலே நாம் அளவு கடந்த ஆசை கொண்டு செயற்படுவதே ஆகும். இதைத் தவிர்ப்பதற்கு நாம் எமது மொழி, சமய, கலாசார விழுமியங்களை முறையாகப் பின்பற்றி அதன் வழி செயல்புரிய எம்மை ஆளுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு**

என்கின்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றை மனதினிலே கொள்ளவேண்டும்.

இந்தவகையில் எமது விழுமியங்களில் ஒன்றான ஜோதிடம் பற்றிய தெளிவு எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு அது பற்றிய ஒரு தொடர் கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

எமது பாரம்பரிய பொக்கிஷங்களின் தத்துவங்களை நல்ல முறையில் நல்வழியில் எப்படிச் செயற்படுத்துவது? எம் வாழ்வில் எம்மோடு உள்ளவர்கள் எப்படிப்பட்ட குணாதிசயங்கள் கொண்டு வாழ்கின்றார்கள்? இவர்களின் குண இயல்புகளைச் செயல் படுத்துகின்ற பூர்வ ஜென்ம தொடர்பும், கிரஹங்கள் எனப்படுகின்ற ஒன்பது கோள்களின் செயற்பாடும் எப்படியான குணாதிசயங்களைக் கொடுக்கின்றது என்பது பற்றி இங்கு பார்க்க இருக்கின்றோம். இந்தக் கட்டுரை ஜோதிடத்தில் உள்ள பல விடயங்களை அனைவரும் புரியும் வகையில் உதாரணங்களுடன் ஜோதிடத்தின் தன்மைகளைப் பலபரிமாணங்களில் வெளிக்கொண்டு வருவதாய் அமையும்.

மனித வாழ்வு வினையின் பயனாக அமைந்ததாகும். செய்கின்ற செயல் அதற்குரிய பலன் எனும் வகையில் வாழ்வு அமைகின்றது. எம்மோடு சேர்ந்த இந்த தூல தேகம் வெறும் கூடாகும். உள்ளே இருக்கும் ஆன்மா நிறைவானது. நிலையானது. தேகம் அழிந்துவிடும். ஆன்மா அழிவே இல்லாதது. அந்த ஆன்மா செயலுக்கு ஏற்ற பிறப்புக்கள் தொடர்ந்து கொள்கின்றது. எனவே பிறப்பை புனிதமாக்கி நாம் நல்ல செயல் சிந்தனை கொண்டு வாழப் பழகிக்கொண்டு எம்முடைய எண்ணங்களில் இருக்கும் லௌகீக சுகங்களைக் கட்டுப்படுத்த முயலவேண்டும். அதையே ஜோதிடப் பாடலும் எமக்குத் தெளிவு படுத்துகின்றது.

**ஜனனீ ஜென்ம சௌக்யானாம்**
**வர்த்தனீ குல சம் பதாம்**
**பதவீ பூர்வ புண்ணியானாம்**
**லிக்யதே ஜன்ம பத்திகா!**

இந்தப் பிறப்பில் எங்கள் பிறவிப் பயன்களை இறைவன் விதிப்படி பொருந்தச் செய்பர்கள் நவநாயகர் எனப்படுகின்ற நவக்கிஹரங்கள் ஆவர். அந்த வகையிலே ஒருவர் ஜனனம் செய்கின்ற நாளில் அமைகின்ற நக்ஷத்திரம், லக்னம், கிரஹ அமைப்பு, பிறப்புத்திகதி என எல்லா வகையிலும் அந்த ஜாதகரின் தன்மைகள், செயல்கள், குணங்கள் என அதற்குரிய கிரஹ ஆதிபத்திய நாயகர்களால் ஆளுமை கொள்ளப்படுகின்றன. அது மட்டுமன்றி ஜென்ம லக்னம் முதல் விரயஸ்தானம் எனச் சொல்லப்படும் பன்னிரண்டு ஆதிபத்தியங்களும் ஒவ்வொரு விதமான பலா–பலன்களைத் தருகின்றன. அந்தப் பலன்கள் அந்த ஸ்தான அதிபதியின் பலனோடும் அந்த கிரஹங்கள் அமைகின்ற சஞ்சாரம் என்பனவற்றோடும் இணைந்து விரிவு பெறும் பலன்களாக அமைக–ின்றன.

அந்த வகையில் ஜனன ஜாதகத்திலே மிக முக்கியத்துவம் பெறும் அமைப்பு அவனது ஜன்ம லக்கினம். இந்த லக்னமே ஒரு ஜாதகரின் பலாபலன்களை நிர்ணயிக்க மிகவும் முக்கியமான–தாக அமைகின்றது. இதில் இருந்துதான் ஜாதக பலன்களும் விரிவு பெறுகின்றன. இதற்கு, பிறக்கின்ற ஜாதகரின் நேரம், பிறந்த இடம், பிறந்த திகதி, மாதம் , ஆண்டு என்பன மிக முக்கியமாக வேண்டும். ஒருவரின் லக்ன குணாதிசயங்கள் எப்படியிருக்கும் என்பதை அறிய, அதிலும் உங்கள் லக்னத்திற்கு ஏற்ற குணாதிசயங்களை நீங்களே அறிய,

அடுத்த கலசம் வரும் வரை காத்திருங்கள்..............!

# யோகசுவாமிகள் ஆன்மிக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்

வித்துவான் க.ந.வேலன் (சென்ற இதழ் தொடர்ச்சி)



**தத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கம்** (கலசம் 44 இன் தொடர்ச்சி)

ஒரு முறை கொழும்புத் துறையிலுள்ள ஆச்சிரமக் கொட்டிலில் தங்கியிருந்த போது அவர் முன்னிலையில் சில அன்பர்கள் குழுமியிருந்தனர். அங்குள்ளவர்களைப் பார்த்து இங்கு எத்தனை பேர் உள்ளோம் என்று வினவினார். எல்லோரும் எண்ணத் தொடங்கிவிட்டார்கள். முடிவில் எண்ணிக்கையைச் சொன்னார்கள். இறுதியாகச் சுவாமிகள் இங்கு ஒருவர்தான் உள்ளார் என்று கூறினார்.

எனவே எது உண்மை? பன்மையுணர் வினையுடையவர்களுக்குப் பலர் இருப்பது உண்மை. ஒருமையுணர்வுடைய சுவாமி களுக்கு ஒருவர் இருப்பது உண்மை. சமயப் பிரசாரத்தையோ, சமய விவாதத்தையோ விரும்பாத சுவாமிகளிடம் யாழ் நகர மண்டபத்தில் சில நாட்களுக்கு முன் நடைபெற்ற சமய விவாதத்தைச் சில அன்பர்கள் கூறினார்கள். அந்த விவாதம் வேதாந்தச் சார்பான ஒரு துறவிக்கும் சைவ சித்தாந்த சார்பான ஒரு துறவிக்குமிடையில் நடைபெற்றது. தென்னிந்தியாவிலிருந்து வந்து மோதிக்கொண்ட அந்தப் பிரபலமான துறவிகளின் மோதலைப் பார்க்கப் பெருங்கூட்டம் கூடியது

இந்த நிகழ்ச்சியையே சில அன்பர்கள் சுவாமிகளிடம் கூறினர். அதனைக் கேட்ட சுவாமிகள் கூறிய பதில் மிக மிகச் சுருக்கமானது. ஆனால் சிந்தித்து உணரப்படவேண்டியது. அது இது தான் **அவர்களுக்குக் காணும் ரிசிபத்தினிகள் இருக்கிறார்கள்.** இவ்வளவுதான். இதன் பொருள் என்ன? அவர்கள் காமத்திலிருந்து விடுபடாத துறவிகள். அவர்கள்காமகோடிகளல்ல. காமம் என்னும் மூல உணர்விலிருந்தே குரோத லோப, மோக, மத, மாற்சரியம் முதலிய குணங்கள் தோன்றுகின்றன. எனவே குரோதம் முதலிய குணங்களின் அடிப்படை காமம்.

இந்த வேதாந்த சித்தாந்த விவாதத்தைத் தூண்டிவிட்டவை அவர்களிடமிருந்த குரோத, மோக, மத, மாற்சரிய உணர்வுகள். இவற்றின் அடிப்படை காமம். இந்தக் காமத்தையே ரிசிபத்தினிகள் இருக்கிறார்கள் என்றார். அவர்க

ளுக்குக் காமம் இருக்கிறது. அதுவே அவர்களை விவாதிக்கச் செய்கிறது. இந்தப் பதிலிலுள்ள பொருள் ஆழமும் நகைச் சுவையும் அதனை அவர் வெளியிட்ட நாகரிக யாழ்ப்பாணத் தமிழ் நடையும் எண்ண, எண்ண வியப்பை ஊட்டுகின்றன.

சுவாமிகள் சைவ சித்தாந்த தத்துவ சிந்தனையில் ஏற்படுத்திய தாக்கத்தை – மாற்றத்தை உணர்ந்து கொள்ளாதவர்கள் சில சைவசித்தாந்திகள் மாத்திரமல்ல, சில வேதாந்திகளும் தான்.

திருமூலர் போன்றவர்களால் உணர்த்தப்பட்டு மெய்கண்டார் போன்ற சந்தான குரவர்களால் விளக்கப்பட்டு தாயுமானவரால் தெளிவுபடுத்தப்பட்ட வேதாந்த சித்தாந்த சமரசத்தை ஈழத்தில் நிலைநாட்டியவர், வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை பெற்ற வித்தகச் சித்தராகிய யோகசுவாமிகளேயாவார்.

**சமயத்தில் ஏற்படுத்திய தாக்கம்**

சமயம் என்பது தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அந்தத் தத்துவத்தை அடைய மக்களை இட்டுச் செல்வதே சமயமாகும்.

தத்துவத்தை இலகுவில் எல்லோரும் புரிந்து கொள்ள முடியாது. வேதாந்தத்தின் ஞானகாண்டம் தத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றது. அதனையடையும் சமயக்கிரியைகளை விளக்குகின்றது கர்மகாண்டம். இரண்டாகிய வேதத்தை விளக்கவே தனித்தனி ஆகமங்கள் தோன்றின. இதனையே ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க! என மாணிக்கவாசகர் பாடினார். இந்த ஆகமங்களை மேலும் தெளிவுபடுத்தவே இதிகாசங்களும் புராணங்களும் ஏற்பட்டன. அவற்றை மக்கள் மயப்படுத்தவே கலைகள் பலவிதமாகத் தோன்றின. இவை எல்லாவற்றின் மையமும் இறைவனே.

இந்தக் கலைகளே கலாசாரத்தின் ஊற்றுக்கள். காலாசாரத்தால் வளர்க்கப்படுவதே ஒழுக்கமாகும்.

தத்துவம் தவிர்ந்த அதனையடிப்படையாகக் கொண்டெழுகின்ற எல்லாமே சமயம் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் தத்துவமும் ஏறக்குறைய ஒன்றே. ஏனெனில் உண்மை, உணர்ந்தவர்களுக்கு ஒன்றுதான். உண்மை ஒன்றாயிருக்கும் போது அதனை அடிப்படையாகக் கொண்ட சமயமும் ஒன்றாயிருந்தாலென்ன? இதனையே மதவாதிகள் மக்களை மதமாற்றம் செய்வதன் மூலம் சாதிக்கமுயல்கிறார்கள். ஆனால் இது இயற்கைக்குப் பொருத்தமற்றது.
தாயுமானவர் சமயகோடிகள் என்றார். உலகில் உள்ள சமயங்கள் எத்தனை என்னும் வினாவுக்குத் தாயுமானவர் கோடிக்கணக்கான சமயங்கள் என்கின்றார்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமகிருஷ்ணர் எத்தனை சமயங்கள் உள்ளன என்னும் வினாவுக்கு, உலகில் எத்தனை மக்கள் இருக்கிறார்களோ அத்தனை சமயங்கள் இருக்கின்றன என்றார்.

இந்த உண்மைக்கு எந்தச் சமயமும் விதிவிலக்கல்ல. இந்துசமயத்தில் எத்தனை பிரிவுகள் தோன்றிவிட்டன ஏனெனில் சமயங்கள் மக்களுக்கு வழிகாட்டும் போது அந்தச் சமயநதி, தான் பாய்ந்து செல்லும் மக்களின் வரலாற்றுப் பின்னணி, புவியியல், மனஇயல் முதலிய பாரம்பரியங்களுக்கு ஏற்பத் தன்னை மாற்றியே பாய்ந்து பயன் விளைத்துச் செல்லும். ஜீவகாருண்யத்தை எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டாலும் சமணமும், பௌத்தம், இந்துசமயம் போன்று ஏனைய சமயங்கள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதில்லை.பலதார மணத்தை இந்திய மதங்களைப் போன்று ஏனைய மதங்கள் கண்டிக்கவில்லை.

விக்கிரக வழிபாட்டைச் சில போற்ற, சில தூற்றுகின்றன.

அதிகம் போவானேன்? யாழ்ப்பாணத்தில் இந்துக்கோவில்களில் ஆண்கள் மேலாடையுடன் போவது தடுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து, கனடா போன்ற குளிர்ப்பிரதேசங்களில் உள்ள இந்துக்கோவில்களில் இதனைச் செயற்படுத்தமுடியுமா?
எனவே வேதத்தின் ஞானகாண்டத்தைத் தத்துவத்தின் அடித்தளமாகவும், கர்மகாண்டத்தையும் ஆகமங்களையும் சமயத்தின் சமயக்கிரியைகளின் அடித்தளமாகவும் கொண்டுள்ள நமது சமயம், தான் பின்பற்றும் நெறிகளிலே கால தேச மாற்றங்களுக்கு ஏற்ப வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாததாகும்.

**கிரியைகளெல்லாம் ஞானம் கிளர்தற்கு வழி** என்று சிவப்பிரகாசம் கூறும்.

ஆன்மபக்குவ உயர்நிலையடைந்த உயிர்கள் கூட

**செம்பலர் நோன்றாள் சேரலொட்டா**
**அம்மலங்கழீஇய அன்பரோடு கூட வேண்டும்** –என்றும்,

**ஆலயம் தானும் அரன் எனத்தொழவேண்டும்** – என்றும்

சிவஞானபோதம் கூறுவதையும் நினைவிற்கொள்ள வேண்டும். இந்தப் பேருண்மைகளையெல்லாம் உணர்ந்த சுவாமிகள் இன்றைய காலத்து ஈழநாட்டுச் சமுதாயத்துக்குப் பொருத்தமான செயற்படுத்தக்கூடிய, செயற்படுத்த வேண்டிய அறநெறிகளையும் சமயக்கிரியை களையும் நற்சிந்தனையில் கூறியுள்ளார்.

**ஏத்துக பொன்னடி** எனத்தலைப்பிட்டு
**தொழுது வணங்குக தூநீறணிக**
**பழுதியல் ஐந்தெழுத்தும் பன்னுக பன்முறை**
எனக் கூறியுள்ளார்.
இந்து சமய தத்துவநூல்கள் உறுதியான தத்துவதளத்தை அமைத்துக்கொடுக்க அறநூல்கள் மன வயலின் களைநீக்கிப் பண்படுத்தத் தோத்திர நூல்கள் பண்பட்ட மன வயலில் பக்திப் பயிரை வளர்ந்தோங்கச் செய்ய திருமந்திரம் போன்ற யோகநூல்கள் ஆன்ம இறைக்கூட்டமாகிய யோகத்தைக் கூட்டு விக்கின்றன.
இந்நிலை எய்தத் தமிழ்மக்கள் தினமும் ஓத வேண்டிய நூல்கள் மூன்று.திருக்குறள் மன மாசுபோக்கிப் பண்படுத்தும். திருவாசகம் பக்திப்பயிரை வளர்த்தெடுக்கும். திருமந்திரம் யோகம் கைவரச்செய்யும். யோகசுவாமிகள் தத்துவ தளத்திலே ஏற்படுத்தியதாக்கத்தைப் போன்று சமயதளத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அவர் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் தத்துவதளத்தை அமைத்துக் கொடுத்துள்ளதோடு, பல அறங்களையும் கூறும் அறநூலாகவும் பக்திதரும் தோத்திர நூலாகவும் யோகம் கூட்டிவைக்கும் யோக நூலாவும் அமைந்தது. சுவாமிகள் நிறுவிய சிவ–தொண்டன் நிலையங்களில் சைவசமய முறைப்படி இக்காலத்துக்குப் பொருந்திய வழிபாட்டு முறைகள் பேணப்பட்டுவருகின்றன.

அவர் எழுத்துக்களிலும் சிவதொண்டன் இதழிலும் இக்கோட்பாடு வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆண்டுதோறும் நடத்திய பாதயாத்திரை அவர் செய்தகாலத்துக் கேற்ற மாற்றங்களுள் ஒன்றாகும்.
ஆழ்வார் மொழிப்படி கூட்டுப்பிரார்த்தனை கூட்டுவழிபாடு பாதயாத்திரை முதலியன பேணப்பட்டன. மாறா இயல்புடையது சமயதத்துவம். கால இடங்களுக்கேற்ப மாறும் இயல்புடையன சமயநெறிகள். மாறி வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஏற்பவே சமய நெறிகளின் சிற்சில மாற்றங்களைச் சுவாமிகள் அமைத்துள்ளார்கள். (தொடரும்)

(continued form page 8)

wisdom of the western alchemical tradition. Scholars can argue even against the historical Jesus but in the end a good dream is more powerful than any historical reality. The perennial wisdom at the root of Rosicrucian alchemy or the Tamil siddhar tradition transcends time and space. It is an ever present guide leading any sincere aspirant into the immortal realm.

**REFERENCES:**

1. Kamil Zvelebil, "The Cittar: An Enigma", chapter 14 ofTHE SMILE OF MURUGAN on TAMIL LITERATURE OF SOUTH INDIA (Leiden, Brill, 1973)p. 218

2. Thiru N Kandaswamy Pillai, HISTORY OF SIDDHAR MEDICINE, (Madras, Manorama Press, Gov. of Tamil Nadu, 1979), p 254

3. Hugh Finlay, editor INDIA, A TRAVEL SURVIVAL KIT (5th edition, Hong Kong, Lonely Planet, 1993), p. 1011

4. Stanislas Klassowski de Rolla, THE GOLDEN GAME: ALCHEMICAL ENGRAVINGSOF THE SEVENTEENTH CENTURY, (New York, Braziller, 1988), p. 41

5. Manly P. Hall, ORDERS OF THE GREAT WORK- ALCHEMY (Los Angeles, P.R.S., 1940) p. 34.

கலசம் இந்தப் புலம் பெயர் நாட்டில் வாழும் சைவமக்களுக்குச் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

டாக்டர் வீ. பழனிவேல்

F.D.S.R.C.S(Eng) (பல்வைத்தியர்)

127 Green Gate Street, London E 13 OBG

Tel: 0208 472 9429

(4ம் பக்கத் தொடர்ச்சி...)

கதைகள் ஒரு ஆதார மூலத்தை— சரித்திரங்களை மையமாகக் கொண்டு உருவானவை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

தற்கால விஞ்ஞான ஆய்வுகளாலும், செய்மதி (செயற்கைக்கோள்) படப்பிடிப்புகளாலும் கடலின் அடியில் ஆழ்ந்து கிடக்கும் கட்டிடங்களை ஆராயக்கூடியதாக உள்ளது. எமது இந்து மகாசமுத்திரத்தில், பூம்புகார் கடலில்(70) எழுபது அடி ஆழத்தில், கரையில் இருந்து மூன்று மைல் தூரத்தில், கிட்டத்தட்ட இரண்டு ஆள் உயர கட்டிடங்கள் ப வடிவத்தில் ஆழ்ந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாற்பது (40) மீற்றர் நீளமான இது 12000 பன்னீராயிரம் வருடங்களுக்கு முன்பாகவே நிலப்பரப்பில் (Dry Land) கட்டப்பட்டதகும். இந்திய தேசிய கடலாராய்வாளர்களான டாக்டர் கவர் (Dr. Gawer) திரு ஸ்ரீ சுந்தரேசன் ஆகியோர் இப்படிப் பட்ட பெரிய கட்டிடங்களைக் கட்ட இந்தப் பழங்குடிமக்கள் எவ்வளவு தொழில் நுட்பம் வாய்ந்தவர்களாக அன்றே இருந்திருக்கிறார்கள் என்றும் தமது வியப்பை தெரிவித்தார்கள்.

இவற்றைவிட இன்றும், பல கடலில் ஆழ்ந்த கட்டிடங்கள் மகாபலிபுரக் கடலின் அடியில் இருப்பது அங்கே மீனவர்களுக்கு பலகாலமாகத் தெரிந்ததே. ஆனால் இதனை ஓர் ஆராய்ச்சியாக எடுத்துப் படிப்பதில் அந்நாட்டு அதிகாரிகளும் அறிஞர்களும் முன்வராமல் அலட்சியமாக இருந்தது மிகவும் கவலைக்குரியது. இந்த கட்டிடங்களைப் போல இன்னும் நான்கு கட்டிடங்கள் கடலுக்கடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகப் பழைமை வாய்ந்த ரிக் வேதத்தில் பல இடங்களில் சரஸ்வதி என்னும் நதியைப் பற்றியும் அதன் நதிக்கரையில் வாழ்ந்த மக்களையும் அவர்களது நாகரிகம் பற்றியும் பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஹரப்பா காலகட்டத்துக்கும் முந்திய (Pre-Harapan) நாகரீக குடிகள் என்பது புராதன ஆராய்ச்சியாளர் டாக்டர் குப்தா (Dr.Gupta) அவர்களின் கருத்து. இவர் இந்தியாவின் ஜெய்ப்பூர் அரும்பொருள் நுண்ணாய்வு நிலையத்தின் ஆய்வாளர் ஆவார். இந்த ஆறு, பத்தாயிரம் (10,000) ஆண்டுகள் முழு வேகத்துடன் பாய்ந்தது என்றும், இது ஆறாயிரம் (6000) ஆண்டுகளின் முன்பே வற்றிவிட்டது என்றும், இது பாய்ந்த இடங்களின் பனிஆற்று (Glaciers) வடுக்களை செய்மதி (செயற்கைக்கோள்கள்) மூலமாக எடுத்த படங்களின் மூலம் உறுதிப்படுத்தி டாக்டர் A.K .குப்தா காண்பித்துள்ளார். இந்த ஆறு இமயமலையில் இருந்து தொடங்கி கிட்டத்தட்ட இருபது (20) கிலோமீட்டர் நீளத்துக்குப் பாய்ந்துள்ளது. சிந்துவெளி நாகரிக நகரமான மொஹஞ்சதாரோ நகர நாகரீகம் ஐயாயிரத்து ஐந்நூறு (5500)வருஷம் பழைமையானது.

ஆனால் ஹரப்பன் நாகரிகத்துக்கும், முன்பான இந்த (சரஸ்வதி நதி) நாகரிகம் ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதால் ரிக்வேதம் பதினோராயிரம் (11000) ஆண்டுகளுக்கும் முன்பதாக இருக்கவேண்டும் என்று சரித்திர ஆய்வாளர் டாக்டர் N.S. இராஜாராம் கூறுகின்றார். இதே போல் குஜராத் மாநிலத்திலும் (இந்தியாவின் மேற்குக்கடல்) ஐம்பது (50) கிலோ மீற்றர் தூரத்தில் (கரையிலிருந்து) நூற்றி ஐம்பதிற்கும் (150) இருநூற்றிமுப்பது (230) அடி ஆழத்தில் இரண்டு

நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது கிருஷ்ணபிரானின் துவாரகை நகராக இருக்கலாம் என எண்ணப்படுகின்றது. துவாரகை நகரம் கிருஷ்ணர் உலகை விட்டு நீங்கியதும் கடலில் மூழ்கியதாக புராணங்கள் கூறுகின்றன.

இந்த அகழ்வாராய்ச்சி இந்தியக் கடலாய்வாளர்களால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இதில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களை ஆராய்ந்தபோது அவை ஏழாயிரத்து ஐந்நூறு(7500) ஆண்டுகள் பழைமைவாய்ந்தது(Carbon dating) என்றும் உறுதி செய்துள்ளார்கள்.

இந்த கட்டிடம் நூற்றி இருபது (120) அடி ஆழக்கடலில் இருப்பதாகவும் இது எட்டு(8) கிலோமீற்றர் நிளமானது என்றும் உறுதிப்படுத்தி பேராசிரியர் டாக்டர் பத்திரி நாராயணன் கூறினார். இது ஒலி அலைகளைக் கடலில் செலுத்துவதன் மூலம் (Sonar Reading) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர் இந்திய தேசிய கடல் ஆய்வு நிபுணராவார்.

இந்த தொன்மையான கால கட்டத்தில் ஒரு மனித இனம் இவ்வளவு முன்னேற்றமுடையதாக இருந்திருக்கமுடியுமா என்று விஞ்ஞானிகளும் அகழ்வாராய்ச்சியாளர்களும் பிரமிக்கின்றார்கள்.

இந்தகட்டுரைக்கு முக்கியமான ஆதாரம் இலண்டன் தொலைக்காட்சியில் (Channel 4) ஒளிபரப்பப்பட்ட (வெள்ளத்தில் மூழ்கிய பனிக்கால இராச்சியங்கள்) என்ற நிகழ்ச்சியில் இருந்து எடுக்கப்பட்டது.இதை (Mr.Graham Hancok) திரு.கிரகாம் கான்கொக் என்பவர் உருவாக்கி வழங்கினார். அவருக்கு நன்றி.

இந்த ஆவணத்தை ஒளிப்பேழையாக (D.V.D) இல் சைவ முன்னேற்றச் சங்கம் இலண்டன் கிளையுடன் தொடர்பு கொள்வதின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவர்களது விலாசம் : Saiva Munnetta Sangam (UK), 2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel :020 8514 4732

ஒவ்வொரு தமிழனும் பொக்கிஷப்படுத்த வேண்டிய ஆவணம் இது (உங்கள் பிள்ளைகளுக்கும் காண்பியுங்கள்) ஒரு தமிழராவது இந்த கட்டுரை மூலம் பயனடைந்தால் அதுவே இந்த முயற்சிக்கு கிடைத்த வெகுமதியாகும்.

# சிறுவர் கலசம்

## DURGA - THE SLAYER OF MAHISHA

continued from last Issue....




ASSUMING THE FORM OF A BUFFALO, MAHISHA CHARGED FORTH SNORTING AND BELLOWING.
HE TRAMPLED UPON DURGA'S MEN . . .
. . . AND LASHED AT THEM WITH HIS TAIL.
ENRAGED, DURGA FLUNG A NOOSE AT HIM.


MAHISHA SHOOK HIMSELF WITH ALL HIS MIGHT ...
... TRANSFORMED HIMSELF INTO A LION AND POUNCED UPON DURGA.
AS DURGA CHOPPED OFF THE HEAD OF THE LION ...
... MAHISHA ROSE IN HIS OWN FORM AND CHARGED.

# Knowledge That Saves



Rama Sastry was a great pandit (well educated man) who lived in a village in India. He knew many sastras by heart. He could argue brilliantly and quote profusely from memory. In any debate he always won. The simple villagers would wonder how small a head could contain so much knowledge. However, Rama Sastry's pride was as huge as his knowledge.

One day he wanted to attend a debate to be held in a town on the other side of the river. The winner in the debate would get a big reward. The pandit came to the riverside. He hailed a boatman and haggled with him for a long time. Finally the boatman agreed to ferry him across the river for 25 Rupees.

The pandit got into the boat. He was the only passenger in it. So to spend the time he started conversing with the boat man. He boasted about the number of Sastras he had learnt. He mentioned the different scholars he had defeated in debates. The pandit said, "My dear boatman, the purpose of human life is to learn as many sastras

as possible. What sastras have you studied?" The boatman humbly said that he was illiterate. But everyday he prayed to God. The pandit said it would not do. Had he not studied the Vedas? The boatman said he had not even heard the name. The pandit declared "You have wasted a quarter of your life. I myself have taken 10 years to master the Vedas. Alright. Tell me, have you read atleast the Bhagavad Geeta?" The boatman hung his head and said, "Master, I know nothing about Geeta." The pandit smiled

scornfully and said, "Then half your life has been wasted."

After a few minutes, the pandit asked him again, "You have read the Ramayana and

Mahabharatha, I suppose?" The boatman remained silent. The pandit said "I can only pity you. You have wasted three-fourths of your life. Try to learn something in the quarter of your life left." The boatman looked sad.

As they were talking a storm began to blow. The boat started to rock violently. It looked that the boat would topple and sink. The boatman addressed the pandit with joint palms. "Venerable sir, I am afraid we have to abandon the boat. I hope you know swimming, Sir"

The pandit was taken aback. "No, no. I had no time to learn swimming. I cannot float on the water even for a few minutes. Please save me!" The boat man replied," I cannot save you. Only the knowledge of swimming can save you. It is true that I do not know any of the holy texts. I have wasted three-fourths of my life. But I know swimming, that will save my life. What a pity you have not learnt swimming. You have wasted the whole of your life. With these parting words the illiterate boatman swam to safety.The learned pandit found the bottom of the river.

Knowledge is not for show but for use. It should make you humble, not proud.



# HINDUISM

**What is the nature of the Hindu God?**

The ultimate divine principal is unfathomable . But it makes itself known through many **manifestations** (avatars). The foremost manifestation is that of the gods. The gods of the Hindu universe are guardians of the natural order. They help humans enjoy a worldly life. They also provide the means to break free from the cycle of birth and death.

"That which speech cannot express but that by which speech is expressed is Brahman. Know that alone as Brahman, not that which people worship here. That which cannot be felt by mind but that which enables mind to feel is Brahman. **That which cannot be seen with the eye but which enables your eye to see, understand that alone to be god,** not what people worship here"
Kenopanishad 1.2 - 1.7

God is the subject of all you see, hear, smell, touch, taste, feel or understand. Therefore God can never be an object of perception or comprehension. Upanishadic Sages were totally in god consciousness, and do not take credit for their wisdom of their words but dedicate to their Gurus. **That humility is the key to the fine teaching.** There is popular misconception that breathing keeps us alive, but it is that Aatman (Brahman) which sustains
the prana (breath) to give us life.

**God is only one**. His nature is Sat Chith Ananda i.e., eternal Existence, Consciousness and Bliss. He is the creator of this universe. He creates it by His power out of Himself, sustains it and then withdraws it into Himself, once its purpose is over. This process goes on forever, in a cyclic order.

Once this universe is brought into being it is He who rules it like an emperor meting out rewards and punishments to the living beings in accordance with their merit and demerit. He is all knowing, all-powerful, all pervading, as also the indwelling controller of all beings. He is the repository of truth, knowledge and beauty; in fact, the perfect embodiment of all the great virtues that one can ever imagine. But compassion towards the bound and suffering souls is His cardinal virtue. In fact the

very creation of this world is for the uplift of these fallen beings, so that they can gradually be raised to the spiritual plane, ultimately reaching perfection. He is fond of faith and devotion.

